வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : சரவணகுமார்

தேதி : 30.03.2026 – திங்கட்கிழமை நேரம் : மாலை 6.10 மணி

---

*தலைப்புச் செய்திகள்*

- பிரதமர் திரு. நரேந்திர மோடி, நாளை, குஜராத் மாநிலத்திற்கு ஒரு நாள் பயணம் மேற்கொள்கிறார்.
- வாடிக்கையாளர்களின் விவரங்களை பாதுகாக்க வேண்டிய முழு பொறுப்பு வங்கிகளுக்கு உள்ளது என்று நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.
- நாட்டை இடதுசாரி தீவிரவாதத்தில் இருந்து, விடுவிப்பதற்கான முயற்சிகள் குறித்து, மக்களவையில் இன்று விவாதம் நடைபெற்றது.
- புதுச்சேரி சட்டமன்றத் தேர்தலையொட்டி, வாக்காளர் விழிப்புணர்வு பிரச்சாரத்தின் ஒரு பகுதியாக, இளையோர் விழா, இன்று நடைபெற்றது.

*மோடி -1 (4)*

பிரதமர் திரு. நரேந்திர மோடி, நாளை, குஜராத் மாநிலத்திற்கு ஒரு நாள் பயணம் மேற்கொள்கிறார். இந்தப் பயணத்தின்போது. மஹாவீர் ஜெயந்தியை முன்னிட்டு, காந்தி நகரில் உள்ள சாம்ராட் சம்ப்ரதி அருங்காட்சியகத்தை திறந்து வைத்து உரையாற்ற உள்ளார்.

*மோடி - 2 (18)*

(வாய்ஸ்)

குஜராத்தின் மஹாவீர் ஜெயின் ஆராதனை கேந்திர வளாகத்தில் அமைந்துள்ள இந்த அருங்காட்சியகத்தில் இந்தியாவின் நாகரிக மரபுகளின் தனித்துவத்தை வெளிப்படுத்தும் வகையில், 7 பிரிவுகளில்

காட்சிப் படுத்தப் பட்டுள்ளன. பல நூற்றாண்டுகள் பழமையான அரிய நினைவுச் சின்னங்கள், ஜெயினர் கலைப் பொருட்கள் மற்றும் சேகரிக்கப்பட்ட பாரம்பரிய பொருட்களும் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. இவற்றில் நுணுக்கமாக வடிவமைக்கப்பட்ட பழங்கால கல் மற்றும் உலோகச் சிலைகள் பெரிய தீர்த்தப் பட்டா மற்றும் யந்திரப் பட்டா, ஓவியங்கள், வெள்ளி ரதங்கள், நாணயங்கள் மற்றும் கையெழுத்துப் பிரதிகள் ஆகியவை இடம் பெறுகின்றன. இவை அனைத்தும் 7 பிரம்மாண்டமான காட்சிக் கூடங்களில், காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

சாம்ராட் சம்ப்ரதி அருங்காட்சியகத்தை திறந்து வைக்கும் பிரதமர், அதனைத் தொடர்ந்து, அகமதாபாத் சனந்த்தில் உள்ள கெயின்ஸ் செமி கண்டக்டர் ஆலையையும் திறந்து வைக்கிறார். இது இந்தியாவின் செமி கண்டக்டர் பயணத்தில் ஒரு குறிப்பிடத்தக்க மைல் கல்லாக இருக்கும். அதனைத் தொடர்ந்து, வாவ் – தரத் நகருக்கு பயணம் மேற்கொள்ளும் பிரதமர் திரு. நரேந்திர மோடி, அங்கு 20 ஆயிரம் கோடி ரூபாய்க்கும் அதிகமான வளர்ச்சித் திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டுவதுடன், முடிவுற்ற திட்டங்களையும் நாட்டிற்கு அர்ப்பணிக்கிறார்.

*மோடி - 3 (3)*

இத்திட்டங்கள் மின்சாரம், ரயில்வே, சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள், சுகாதாரம், நகர்ப்புற மேம்பாடு, பழங்குடியினர் மேம்பாடு மற்றும் கிராமப்புற மேம்பாடு உள்ளிட்ட முக்கியத் துறைகளை உள்ளடக்கி உள்ளது.

*நிர்மலா சீதாராமன் -1 (16)*

இந்திய பொருளாதாரத்தின் அடிப்படை கூறுகள் வலுவாக இருப்பதாக, மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார். இன்று, மக்களவையில், ரூபாயின் மதிப்பு சரிந்து

வருவது குறித்து கேள்விக்கு பதிலளித்துப் பேசிய அவர், உலகளாவிய நிச்சயமற்ற தன்மையால், உலக நாடுகளின் நாணயங்கள் ஏற்ற-இறக்கத்தை சந்தித்து வருகின்றன என்றும், அந்த வகையில், இந்திய ரூபாயின் மதிப்பு, சந்தை போக்கை சார்ந்து இருப்பதாகவும் தெரிவித்தார்.

பணவீக்க விகிதம் குறைந்து வருவதை சுட்டிக் காட்டிய அவர், மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி 7 சதவிகிதத்திற்கும் அதிகமாக உள்ளது என்றார். மற்றொரு கேள்விக்கு பதிலளித்த அவர், வாடிக்கையாளர் தரவுகளின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில், வலுவான சட்ட ஒழுங்குமுறை கட்டமைப்பை வங்கிகள் நடைமுறைப் படுத்தி வருவதாகக் கூறினார்.

பாரத ஸ்டேட் வங்கி சட்டம், வங்கி கம்பெனி சட்டம் , பிராந்திய ஊரக வங்கிகள் சட்டம், கடன் சார்ந்த தகவல்கள் மற்றும் கம்பெனி சட்டம், பொது நிறுவனங்கள் சட்டம் ஆகிய 5 சட்டங்களை வங்கிகள் பின்பற்றி வருவதாகவும், திருமதி. நிர்மலா சீதாராமன் சுட்டிக் காட்டினார்.

*<u>நிர்மலா சீதாராமன் -2 (5)</u>*

தேவைகளின் அடிப்படையில் மட்டுமே வாடிக்கையாளர்களின் விபரங்கள் பெறப்பட்டு, உரிய அதிகாரிகளிடம் பகிரப் படுவதாகவும் அவர் தெரிவித்தார். முறைகேடாகவோ அல்லது அங்கீகாரம் இல்லாமலோ தகவல்கள் பரிமாறப்பட்டால், ரிசர்வ் வங்கியிடம் புகார் தெரிவிக்கலாம் என்றும், அதன் அடிப்படையில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் நிதியமைச்சர் கூறினார்.

***மக்களவை விவாதம் (18)***

நாட்டை இடதுசாரி தீவிரவாதத்தில் இருந்து, விடுவிப்பதற்கான முயற்சிகள் குறித்து, மக்களவையில் இன்று விவாதம் நடைபெற்றது. விவாதத்தை தொடக்கி வைத்துப் பேசிய சிவசேனா உறுப்பினர் திரு. ஸ்ரீகாந்த் ஷிண்டே , இடதுசாரி தீவிரவாதத்தில் இருந்து, நாட்டை விடுவிப்பதற்காக பிரதமர் திரு. நரேந்திர மோடி அரசு, துணை ராணுவப் படைகள், மற்றும் காவல்துறை மேற்கொண்ட முயற்சிகளை பாராட்டிப் பேசினார். மேலும், பல ஆண்டுகளாக இடதுசாரி தீவிரவாதத்தை எதிர்த்து போராடி தங்கள் உயிரைத் தியாகம் செய்த அனைத்து வீரர்களுக்கும் அவர் அஞ்சலி செலுத்தினார். ஒரு காலத்தில், பழங்குடியினர் சுரண்டலை எதிர்கொண்டு, நக்சலிசத்தின் நெருப்பில் தள்ளப்பட்டுள்ளனர் என்றும், ஆனால் தற்போது நிலைமை மாறிவிட்டது என்றும் தெரிவித்தார்.

ஒரு பழங்குடியின பெண் நாட்டின் மிக உயர்ந்த அரசியல் அமைப்பு பதவியான குடியரசுத் தலைவர் பதவியை வகிக்கிறார் என்றும் அவர் குறிப்பிட்டார். பிரதமர் திரு. நரேந்திர மோடி அரசு, பழங்குடியினர், ஏழைகள் மற்றும் விளிம்புநிலை மக்களின் நம்பிக்கையை பெற்றுள்ளதோடு, அவர்களுக்கு அதிகாரம் அளித்து வருவதாகவும் கூறினார். நாட்டின் 200 மாவட்டங்களில் பரவி இருந்த இடதுசாரி தீவிரவாதம் தற்போது வெறும் 3ஆக குறைந்துள்ளதாகவும் திரு. ஸ்ரீகாந்த் ஷிண்டே தெரிவித்தார்.

***கப்பல் எல்பிஜி (10)***

94 ஆயிரம் டன் சமையல் எரிவாயு ஏற்றிய இந்தியாவின் 2 கப்பல்கள் ஹார்மூஸ் ஜலசந்தியை பாதுகாப்பாக கடந்துள்ளன. இன்னும் 2 நாட்களில் இந்தியத் துறைமுகங்களை இந்தக் கப்பல் வந்தடையும் என்றும், அரசு தெரிவித்துள்ளது. ஈரான் மீது அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் நடத்திய தாக்குதலைத் தொடர்ந்து, ஹார்மூஸ் ஜலசந்தி வழியிலான கப்பல் போக்குவரத்து பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், நட்பு நாடுகளின்

கப்பல்கள் இந்த ஜலசந்தி வழியாக கடந்து செல்ல ஈரான் அனுமதி அளித்துள்ளது. ஏற்கனவே, 92 ஆயிரத்து 712 டன் சமையல் எரிவாயு ஏற்றிய 2 இந்திய கப்பல்கள், இம்மாதம் 16 மற்றும் 17 ஆகிய தேதிகளில் பாதுகாப்பாக இந்தியத் துறைமுகங்களுக்கு வந்தடைந்தன.

*__குவைத் (13)__*

குவைத்தில் தொழிற்சாலை ஒன்றின் மீது ஈரான் நடத்திய தாக்குதலில், இந்தியாவைச் சேர்ந்த தொழிலாளி ஒருவர் பலியானதாக குவைத் தெரிவித்துள்ளது. குவைத் அரசின் செய்தித் தொடர்பாளர் திருமதி. ஃபாத்திமா அப்பாஸ் செய்தியாளர்களிடம் பேசுகையில், இந்த தொழிற்சாலையின் கட்டமைப்பு, எந்திரங்கள் மற்றும் பொருட்களுக்கு பலத்த சேதம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.
மின் உற்பத்தி மற்றும் கடல் நீரை குடிநீராக்கும் பணி நடைபெற்று வந்த இந்தத் தொழிற்சாலையை விரைவில் சீரமைத்து, மீண்டும் உற்பத்தித் தொடங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் கூறினார். இதற்கிடையே, குவைத்தில் உள்ள இந்தியத் தூதரகம் வெளியிட்டுள்ள சமூக ஊடகப் பதிவில், உயிரிழந்த இந்திய தொழிலாளிக்கு இரங்கல் தெரிவித்துள்ளது. மேலும், குவைத் அரசு, அதிகாரிகளுடன் தொடர்ந்து பேசி வருவதாகவும், அவர்களிடம் இருந்து தேவையான உதவிகள் கிடைக்கும் என்று நம்புவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

*__இளையோர் விழா -1 (5)__*

புதுச்சேரி சட்டமன்றத் தேர்தலையொட்டி, வாக்காளர் விழிப்புணர்வு பிரச்சாரத்தின் ஒரு பகுதியாக, மாவட்ட தேர்தல் துறை சார்பில், இளையோர் விழா, இன்று நடைபெற்றது. கம்பன் கலையரங்கில் நடைபெற்ற இவ்விழாவில், கல்லூரி மாணவ – மாணவிகள் கலந்து கொண்டனர்.

***இளையோர் விழா - 2 (14)***

(வாய்ஸ்)

புதுச்சேரி அரசின் சமூக நலத்துறையுடன் இணைந்து நடத்தப்பட்ட இந்த தேர்தல் விழிப்புணர்வு விழாவை, மாவட்ட தேர்தல் நடத்தும் அதிகாரி திரு. குலோத்துங்கன் தொடக்கி வைத்தார். அப்போது உரையாற்றிய அவர், வேட்பாளர்களை பற்றி தெரிந்து கொள்ள உதவும் e-KYC செயலி தேர்தல் நன்னடத்தை விதிமீறல்கள் தொடர்பாக சி-விஜில் செயலி  மற்றும் 1950 என்ற கட்டணமில்லா தொலைபேசி வழியே புகார் அளிப்பது குறித்து மாணவ – மாணவிகளுக்கு எடுத்துக் கூறினார்.

புதுச்சேரி  மூத்த காவல்துறை கண்காணிப்பாளர் திரு. கலைவாணன் பேசும்போது, இன்றைய மாணவர்களே எதிர்கால தலைவர்கள் என்பதால், பொறுப்புணர்வுடன் செயல்பட வேண்டியதன் அவசியம் குறித்துக் கூறினார்.

புதுச்சேரி அரசின் சமூக நலத்துறைச் செயலர் திருமதி. ஸ்மிதா பேசும்போது, மாணவ-மாணவிகள் அனைவரும் அவசியம் வாக்களிக்க வேண்டும் என்றும், தங்கள் வீட்டில் உள்ள பெற்றோர்களையும், பெரியோர்களையும் வாக்களித்திட அறிவுறுத்த வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

***இளையோர் விழா - 3 (10)***

புதுச்சேரி கூடுதல் மாவட்ட ஆட்சியர்  திரு. சுதாகர் பேசுகையில், கடின முயற்சிகளுக்குப் பிறகு பெறப்பட்ட வாக்குறுதியை விட்டுக் கொடுக்கக் கூடாது என்று வலியுறுத்தினார்.

தொடக்க விழாவினைத் தொடர்ந்து, மாணவ-மாணவியர் பங்கேற்ற தேர்தல் நடை என்ற நிகழ்ச்சி நடைபெற்றது. இதில், தேர்தல் சம்மந்தப்பட்ட சின்னம் மற்றும் கருவிகள் குறித்து மாணவ – மாணவிகள் பதாகைகளை கையில் ஏந்தி, மேடையில் வலம் வந்தபோது, அதுகுறித்த தகவல்கள் பின்னணியில் ஒலித்தது.

மேலும், வாக்காளர் விழிப்புணர்வு குறித்த வாசகம், போஸ்டர், கட்டுரை, நாடகம், புகைப்படம் என பல்வேறு பிரிவுகளில் நடத்தப்பட்ட போட்டிகளில், வெற்றி பெற்ற மாணவ-மாணவிகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.

*வாக்குப் பதிவு எந்திரம் (12)*

புதுச்சேரி சட்டமன்றத் தேர்தல் வாக்குப் பதிவில், ஊசுடு மற்றம் மங்கல் தொகுதிகளில் பயன்படுத்தப்பட உள்ள மின்னணு வாக்குப் பதிவு எந்திரங்கள் மற்றும் VVPAT எந்திரங்களை வாக்குச் சாவடி வாரியாக ஒதுக்கீடு செய்யும் இரண்டாம் கட்ட தற்செயல் கலப்பு, இந்திய தேர்தல் ஆணையத்தால் உருவாக்கப்பட்ட EVM மேலாண்மை மென்பொருள் மூலம் நேற்று நடைபெற்றதாக, தேர்தல் நடத்தும் அதிகாரி அலுவலகம் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
அனைத்து வேட்பாளர்கள், அவர்களின் பிரதிநிதிகள் மற்றும் பொது பார்வையாளர்கள் முன்னிலையில் தேர்தல் நடத்தும் அதிகாரி அலுவலகத்தில் நடைபெற்ற இந்த தற்செயல் கலப்பு நிறைவு பெற்றதைத் தொடர்ந்து, வாக்குச் சாவடி வாரியாக ஒதுக்கப்பட்ட EVM மற்றும் VVPAT ஆகியவற்றின் விவரங்கள் அவர்களுக்கு வழங்கப்பட்டதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

*வேட்பு மனு (10)*

தமிழ்நாடு மற்றும் மேற்கு வங்க மாநிலங்களின் சட்டப்பேரவைத் தேர்தலுக்கான வேட்புமனு இன்று தொடங்கி உள்ளது. வேட்புமனு தாக்கல் செய்ய வரும் 6ஆம் தேதி கடைசி நாளாகும். வேட்பு மனுக்கள் வரும் 7ஆம் தேதி பரிசீலிக்கப்படும் என்றும், வேட்பு மனுக்களை திரும்பப் பெற ஏப்ரல் 9ஆம் தேதி கடைசி நாள் என்றும் அறிவிக்கப் பட்டுள்ளது. தமிழகத்தின் 234 சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கும் ஒரே கட்டமாக அடுத்த மாதம் 23ஆம் தேதி வாக்குப் பதிவு நடைபெற உள்ளது.

மேற்குவங்க மாநிலத்தில், 2 கட்டங்களாக அதாவது முதல் கட்டமாக 152 தொகுதிகளுக்கு அடுத்த மாதம் 23ஆம் தேதியும், 142 தொகுதிகளுக்கு, 2ஆம் கட்டமாக அடுத்த மாதம் 29 ஆம் தேதி தேதியும் வாக்குப் பதிவு நடைபெறுகிறது.

***<u>மக்கள் தொகை கணக்கெடுப்பு (16)</u>***

நாடு முழுவதும் மக்கள் தொகை கணக்கெடுப்புப் பணிகள் நாளை மறுநாள் ஏப்ரல் 1ஆம் தேதி முதல் தொடங்கும் என்று, மத்திய கணக்கெடுப்பு ஆணையரும் – பதிவுத்துறை தலைவருமான திரு. மிருத்யுன் ஜே நாராயணன் குமார் தெரிவித்துள்ளார். புதுடெல்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், மக்கள் தொகை கணக்கெடுப்புப் பணி, 2 கட்டங்களாக நடைபெறும் என்று கூறினார். ஏப்ரல் மாதம் தொடங்கி செப்டம்பர் மாதம் வரை நடைபெறும் கணக்கெடுப்புப் பணிகளில், வீடுகள் தொடர்பான தகவல்கள் திரட்டப்படும் என்றும், 2ஆவது கட்டமாக நடைபெறும் மக்கள் தொகை கணக்கெடுப்பில் சாதிவாரியான தகவல்கள் பதிவு செய்யப்படும் என்றும் தெரிவித்தார்.

மின்னணு தொழில்நுட்பம் மூலம் இப்பணிகள் மேற்கொள்ளப்படும் என்றும், இதற்காக 16 மொழிகளை உள்ளடக்கிய பிரத்யேக இணையதளம் ஏற்படுத்தப்படும் என்றும், திரு. நாராயணன் குமார் தெரிவித்தார். நாடு சுதந்திரம் பெற்ற பின் நடைபெறும் 16ஆவது மக்கள் தொகை கணக்கெடுப்புப் பணி இது என்பது குறிப்பிடத்தக்கது.

***<u>விளையாட்டு (5)</u>***

சீனாவின் Tianjin நகரில் நடைபெற்று வரும் உலக ஜூனியர் Wushu சாம்பியன் போட்டியில், இந்தியா 2 தங்கப் பதக்கங்களை வென்றுள்ளது. 45 கிலோ எடைப்பிரிவில் Upendro Thongam மற்றும் 52 கிலோ எடைப்பிரிவில் Nongmaithem Pan heiba singh ஆகிய இந்திய குங்ஃபூ வீரர்கள் தங்கப் பதக்கம் வென்றுள்ளனர்.